செ. கு. எண்: 24 நாள்: 18.1.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 18.1.2012

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சென்னை – திண்டிவனம் ஜி.எஸ்.டி. சாலை, புக்கத்துறை கூட்ரோடு என்ற இடத்தில், 16.1.2012 அன்று திருவண்ணாமலையிலிருந்து சென்னை சென்று கொண்டிருந்த ஆட்டோ மீது உத்திரமேரூரிலிருந்து செங்கல்பட்டு சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் ஆட்டோவில் பயணம் செய்த திருவண்ணாமலை, பாரதி அண்ணாமலை நகரைச் சேர்ந்த திரு. V.T. குணசேகரன் என்பாரின் மனைவி திருமதி கஸ்தூரி என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்தில் அகால மரணமடைந்த திருமதி கஸ்தூரியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் நான்கு பேர் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி கஸ்தூரியின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**